## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: திரு.ப.இரமேஷ் பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

2026–ஆம் வருடம் ஏப்ரல் திங்கள் 15–ஆம் நாள், புதன்கிழமை

அ.வ.எண். 154 / 2014

CNR No.TNTJ15-000053-2014

M. ராஜேஷ் ... வாதி

/எதிராக/

1. ஹலரத் ஹபீப் ஷாஹ் காதீரி தர்ஹா
   அதன் முத்தவல்லி ஷேக் அலாவுதீன் (இறப்பு)

2. ஹலரத் ஹபீப் ஷாஹ் காதீரி தர்ஹா
   அதன் முத்தவல்லி
   காஜா சுல்தான் சையத் அலி ... பிரதிவாதி

(இந்நீதிமன்றம் இ.ம.எண்.531/2025–ல் கடந்த 26.09.2025 அன்று பிறப்பித்த உத்தரவின்படி வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

வழக்கறிஞர்கள் முன்னிலை

| | | |
|---|---|---|
| வாதிக்காக | : | திரு.எஸ்.விஸ்வநாதன் |
| பிரதிவாதிகளுக்காக | : | திரு.கே.வைத்தியலிங்கம் |

## தீர்ப்புரை

சட்டப்படியான வழிமுறைகளைத் தவிர வேறு வழிகளில் வாதியின் அனுபோகத்தை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களும் எவ்வித



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:44:13 +0530

இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1). திருத்தப்பட்ட வழக்குரை சுருக்கம்:**

1.1) சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள தாவா சொத்தானது இந்த பிரதிவாதிக்கு சொந்தமானதாகும். தாவா சொத்து ஆதியில் பஞ்சநத முத்துராஜா மனைவி பார்வதி அம்மாள் குத்தகை சாகுபடி செய்துவந்து மேற்படி பார்வதி அம்மாள் பெயரில் குத்தகை உரிமை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பார்வதி அம்மாள் வாதியின் தகப்பனார் மாரிமுத்துக்கு கடந்த 1993-ம் ஆண்டு தாவா சொத்தை உள்குத்தகைக்கு விட்டிருந்தார். மேற்படி குத்தகை ஒப்பந்தப்படி வாதியின் தகப்பனார் வருடம் ஒன்றிற்கு ரூ.3000/- குத்தகையாக செலுத்திவந்தார். மேற்படி தொகையிலிருந்து பார்வதி அம்மாள் இந்த பிரதிவாதிக்கு குத்தகை செலுத்திவந்தார்.

1.2) மேற்படி பார்வதி அம்மாள் வாதியின் தகப்பனாருக்கு உறவினர் என்பதால் அவரிடமிருந்து ரசீது எதுவும் பெற்றுக்கொள்ளும் வழக்கம் இல்லை. வாதியின் தகப்பனார் தாவா சொத்தில் அவரது உடல்உழைப்பின் மூலம் தாவா சொத்தை குத்தகை சாகுபடி செய்துவந்தார். எனவே தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டப்படி தாவா சொத்தைப்பொறுத்து அவர் ஒரு பயிரிடும் குத்தகைதாரர். அவருக்கு பயிரிடும் குத்தகைதாரர் என்ற முறையில் பாதுகாப்பு உண்டு. தாவா சொத்தானது புன்செய் நிலமாகும். வாதியின் தகப்பனார் தாவா சொத்தில் வழக்கமாக வாழை சாகுபடி செய்துவந்தார். அவர் ஆழ்குழாய் கிணறு அமைத்து அதில் ஒரு



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:44:22 +0530

ஆயில் மோட்டார் அமைத்திருந்தார். வாதியின் தகப்பனார் தாவா சொத்திற்கான கிஸ்தியை செலுத்தி அதனை பார்வதி அம்மாளுக்கு கொடுக்க தொகையை சரிகட்டிகொள்வது வழக்கம்.

1.3) மேலும் தாவா சொத்திற்கான அடங்கலில் வாதியின் தகப்பனார் பெயர் குத்தகைதாரர் என்ற முறையில் பயிரிடுவதாக கண்டு பதிவாகி உள்ளது. மேற்படி பார்வதி அம்மாள் வாதியின் தகப்பனாரிடமிருந்து குத்தகையை பெற்ற போதிலும் இந்த பிரதிவாதிக்கு தவறாமல் செலுத்திக் கொண்டிருக்கிறார் என்ற நம்பிக்கையில் இருந்திருக்கிறார். ஆனால் 13.09.2013 அன்று பிரதிவாதியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது, அதில் வாதியின் தகப்பனார் தாவா சொத்தை அனுபவித்துக்கொண்டு குத்தகை எதுவும் கொடுக்கவில்லை என கண்டு எழுதப்பட்டிருந்தது. உடனே வாதியின் தகப்பனார் மேற்படி பார்வதி அம்மாளை சந்தித்து இந்த பிரதிவாதியிடம் 1 மாதத்திற்குள் குத்தகையை செலுத்திவிடும்படி கூறினார். ஆனால் வாதியின் தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 22.12.2013 அன்று வாதியையும், வாதியின் தாய் மற்றும் சகோதரர்களை வாரிசாக விட்டு இறந்துவிட்டார்.

1.4) வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்தை சாகுபடி செய்யும் காலங்களில் வாதியின் தகப்பனாருக்கு உதவியாக வாதியும் தாவா சொத்தில் விவசாய வேலைகள் செய்தார். அவரது தகப்பனார் மறைவிற்கு பிறகு வாதி தனது உடலுழைப்பை செலுத்தி தாவா சொத்தில் சாகுபடி செய்து வந்தார். இந்த பிரதிவாதி 13.09.2013 தேதியிட்டு அனுப்பிய கடிதம் பற்றி அறிந்திருக்கவில்லை. வாதி கடந்த ஜூலை மாதம்



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:44:31 +0530

கடைசி வாரத்தில் வாதியின் தகப்பனார் வைத்திருந்த பெட்டியை சுத்தம் செய்துக்கொண்டிருந்த போது மேற்படி 13.09.2013 தேதிய கடிதம் கிடைத்தது. வாதி உடனடியாக 3 வருட குத்தகைதொகை ரூ.12,000/– 18.08.2014 நாளிட்ட வங்கி வரைவோலையாக பிரதிவாதிக்கு கிடைக்கும் வகையில் அனுப்பினார். ஆனால் பிரதிவாதி அந்த வங்கி வரைவோலையை திருப்பி அனுப்பிவிட்டார். மேலும் தாவா சொத்தில் உள்ள மரங்களை வெட்டி எடுத்து சென்றுவிட்டதாக வாதி மற்றும் அவரது தாயார் மீது நடுக்காவேரி காவல் நிலையத்தில் பொய்யாக புகார் கொடுத்தார்.

1.5) உண்மையில் வாதி தாவா சொத்தில் வாழை சாகுபடி செய்வதற்க தயார் செய்திருந்த பகுதியில் நிழல் விழாமல் இருப்பதற்கு மரக்கிளைகளை கழித்துள்ளார். மேற்படி விபரத்தை காவல்துறை ஆய்வாளரிடம் தெரிவித்தபோது இருதரப்பினரையும் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு கூறியுள்ளனர். கடந்த 18.08.2014 அன்று வாதி தாவா சொத்தினை டிராக்டர் மூலம் உழவு செய்து கொண்டிருந்தபோது இந்த பிரதிவாதியும் அவரது ஆட்களும் வந்து வேலை செய்யக்கூடாது என வாதியை தடுத்தனர். வாதி உள்ளூர்வாசிகள் உதவியுடன் பிரதிவாதியின் முயற்சியை தடுத்துவிட்டு தாவா நிலத்தினை உழுதுமுடித்துவிட்டார். வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் தாவா சொத்தில் வாழை கன்றுகள் புதைக்க ஏற்பாடு செய்திருந்தனர். பிரதிவாதிகளால் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு ஏற்படும் என்ற அச்சத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்தார். வாதியின் தகப்பனார் இறப்பிற்கு பிறகு வாதி தாவா சொத்தில் சாகுபடி செய்துவருவதால் இந்த தாவா சொத்தைப் பொற்றுத் பயிரிடும் குத்தகைதாரர் ஆவர்.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:44:37 +0530

1.6) இந்த பிரதிவாதிகள் வாதியின் தகப்பனாருக்கு உள்குத்தகைக்கு கொடுத்த பார்வதியம்மாளை பணம் கொடுத்து வாதிக்கு எதிராக மாற்றி உள்ளனர். மேற்படி பார்வதி அம்மாளும் பிரதிவாதிகளிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு பிரதிவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க பொய்யான ஆவணங்களை தயார் செய்து கொடுத்துள்ளார்கள். மேற்படி பார்வதி அம்மாள் தாவா சொத்தை வாதிக்கு உள்குத்தகைக்கு கொடுத்தபிறகு அவருக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை. இந்த பிரதிவாதிகள் பலம் பொருந்தியவர்கள். பணபலமும், ஆள்கட்டும் மிக்கவர்கள். சட்டத்திற்கு புறம்பாக எதையும் சாதிக்கும் வல்லமை படைத்தவர்கள். எனவே இந்த பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தில் சட்டத்திற்கு புறம்பான வழியில் தலையிடாமல் இருக்க நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்கு தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்க கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>எதிர்வழக்குரை சுருக்கம்.</u>**

2.1) பிராது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். தாவா சொத்து பிரதிவாதி தர்ஹா வக்புக்கு சொந்தமானது ஆகும். ஆனால் வாதி பலவருடங்களாக குத்தகை முறையில் சாகுபடி செய்து அனுபவித்து வருகிறார் என்பது முழு பொய். வாதிக்கும் பிரதிவாதிக்கும் குத்தகை உடன்படிக்கை எதுவும் கிடையாது. குத்தகைதாரர் நிலசுவான்தார் என்ற தொடர்பும் இல்லை. தாவா நிலம் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு பஞ்சநதம் என்பவரது குத்தகை அனுபவத்திலிருந்து அவருக்கு பிறகு அவரது மனைவி பார்வதி என்பவர் குத்தகை சாகுபடி செய்து வந்தார். அதனால் குத்தகைதாரர் பதிவேடு தயாரித்த சமயத்தில்



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:44:44 +0530

விசாரணைக்கு பிறகு பார்வதியம்மாள் பெயர் குத்தகைதாரரா பதிவு செய்யப்பட்டுள்ளது.

2.2) அந்த பார்வதியே குத்தகை தொகையை செலுத்தியும், பாக்கி ஏற்பட்டும் உள்ளது. மேற்படி பார்வதி அம்மாள் தனது வயோதிக காலத்தில் தன்னால் சாகுபடி செய்ய இயலாத நிலையில் அதுவரை இருந்த குத்தகை பாக்கியை தள்ளுபடி செய்து மேலும் தொகை எதுவும் கொடுத்தால் நிலத்தை பிரதிவாதி தர்ஹா வசம் குத்தகை நிலத்தை ஒப்படைப்பதாக கூறி அதன்படியே குத்தகை பாக்கியை தள்ளுபடி செய்து கொடுத்ததுடன் ரூ.20,000/- பணமாக கொடுத்து அவர் பெற்றுக்கொண்டு குத்தகை பாத்தியதையை சரண்டர் செய்து பிரதிவாதி வசம் விட்டுவிட்டார். அதற்காக 03.02.2009-ல் அந்த பார்வதி மற்றும் அவரது மகன் வனங்காமுடி மகள் சந்திரா ஆகியோரும் மேற்படி சரண்டர் பத்திரம் எழுதி கையெழுத்திட்டு கொடுத்துள்ளார்கள்.

2.3) அத்துடன் தனது பெயரிலுள்ள குத்தகை பதிவையும் ரத்து செய்ய வட்டாட்சியரிடம் மனு கொடுத்து ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆகவே 2009 வரை பார்வதி வகையறாவே குத்தகை சாகுபடி செய்துள்ள நிலையில் வாதி 1994 முதல் குத்தகை சாகுபடி செய்வதாக கூறுவது ஏற்கத்தக்கதல்ல. அந்த பார்வதி அம்மாளிடம் இந்த வாதியின் தகப்பனார் உள்குத்தகையாக தாவா நிலங்களை பெற்று சாகுபடி செய்து வருகிறார் என்பது முழு பொய். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 77 செண்ட் ஆகும். இதற்கு குத்தகை வருடத்திற்கு ரூ.3000/- மட்டுமே என்பது தவறு. இந்த பகுதியில் வாழை சாகுபடி செய்துவரும் குத்தகைதாரர்கள் ஒரு வாழை கன்றுக்கு குத்தகையாக ரூ.50 வீதம் நில சொந்தக்காரர்களுக்கு கொடுத்து



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:44:52 +0530

வருகிறார்கள். 1 ஏக்கருக்கு குறைந்தபட்சம் 1000 வாழை சாகுபடி செய்யப்படும்.

2.4) இந்நிலையில் குத்தகை தொகை ரூ.3000/- வருடத்திற்கு என்று கூறுவதே பொய். தாவா இடத்தில் வாழை சாகுபடி செய்ததாகவும் அதற்காக ஆழ்துளை கிணறு அமைத்ததாகவும் கூறுவது பொய். வாதியின் தகப்பனார் பெயர் அடங்கல் பதிவேட்டில் குறிப்பிட்டிருந்தால் அது தவறு. வாதியின் தகப்பனாருக்கு இந்த பிரதிவாதி குத்தகை கேட்டு கடிதம் எழுதினார் என்பதனால் மட்டுமே அவர் குத்தகைதாரர் என்று கருத முடியாது. வாதி தாவா இடத்திலிருந்த வக்புக்கு சொந்தமான மரங்களை அத்துமீறி பிரவேசித்து வெட்டி எடுத்துச் சென்றதற்காக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டு விசாரணை எடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து தப்பிக்கவே தாவா சொத்தில் குத்தகை உரிமை இருப்பதாக கூற முற்படுகிறார்.

2.5) பார்வதி குத்தகை நிலத்தை பிரதிவாதி தர்ஹாவிற்கு ஒப்படைவு செய்தபிறகு 03.08.2009-ல் தாவா சொத்தை ஒரு முகமது யூசுப் என்பவருக்கு குத்தகைக்குவிட ஒப்பந்தம் செய்து கொண்டு அவரிடமிருந்து முன்பணம் பெற்றுக்கொண்டு அவர்வசம் கொடுக்கப்பட்டுள்ளது. அவரே தாவா இடத்தை சமப்படுத்தி வாழைக்கன்று நட தயாராக வைத்திருந்ததை 24.08.2014-ல் வாதி அத்துமீறி பிரவேசித்து கன்றுகளை நட்டதால் அந்த குத்தகைதாரர் இந்நீதிமன்றத்திலேயே அசல் வழக்கு தாக்கல் செய்த அதில் இந்த பிரதிவாதியும் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். வாதியே பிரதிவாதி வக்பு மற்றும் அதனுடைய குத்தகைதாரர்களுக்கு செய்ய இந்த வழக்கினை



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:45:00 +0530

தாக்கல் செய்துள்ளதால் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. வாதுரைகள் பார்வையிடப்பட்டு கீழ்கண்ட எழு வினாக்கள் வனையப்பட்டுள்ளது.

<u>எழு வினாக்கள்:</u>

1. Whether the plaintiff is in possession and enjoyment over suit property?
2. Whether the plaintiff is entitled to the relief of permanent injunction as prayed for?
3. To what other relief plaintiff is entitled?

**<u>4. சாட்சியங்கள்:</u>**

வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை வாதி நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது வா.சா–1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்கு 3 ஆம் நபரும், வாதியின் தாயாருமான திருமதி.மாலா வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வழக்கிற்கு 3 ஆம் நபரான திரு.சிவக்குமார் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்கு 3 ஆம் நபர்களான திரு. பாலமுருகன், திரு.நடராஜன் ஆகியோர் முறையே வா.சா.4 மற்றும் வா.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

5. வாதங்கள் கேட்கப்பட்டு சாட்சியங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:45:06 +0530

6) **எழு வினாக்கள் 1, 2 மற்றும் 3:**

6.1) தாவா சொத்துக்கள் பிரதிவாதி தற்கா மூலம் நிர்வகிக்கப்படும் வக்பு வாரியத்திற்கு பாத்தியப்பட்டது ஆகும். வாதியை பொருத்தவரை தாவா சொத்தை பார்வதி என்பவரிடமிருந்து வாதியின் தந்தை மாரிமுத்து என்பவர் குத்தகைக்கு சாகுபடி செய்து குத்தகையை பார்வதி என்பவருக்கு தவறாமல் செலுத்தி வந்ததாகவும், மேற்படி மாரிமுத்து இறப்பிற்கு பிறகு வாதி தொடர்ந்து தாவா சொத்துக்களில் குத்தகை சாகுபடி செய்து குத்தகையை பார்வதி என்பவரிடம் செலுத்தி வந்ததாகவும் தற்போதுதான் தாவா சொத்துக்கள் வக்பு வாரியத்திற்கு பாத்தியப்பட்டது என்று தெரிய வந்தது என்றும், தனது அனுபோகத்தில் இருந்து சாகுபடி செய்து வரும் தாவா சொத்துக்களில் சட்டத்திற்கு புறம்பாக எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார். பிரதிவாதியை பொருத்தவரை தாவா சொத்தை வாதி ஆக்கிரமித்துக் கொண்டு குத்தகை உரிமை இருப்பதாக பொய்யாக உரிமை கொண்டாடி வருவதாகவும் அதனால் வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

6.2) வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான கிஸ்து ரசீதுகள் மாரிமுத்து பெயரில் செலுத்தப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 சிட்டாவில் மாரிமுத்து சாகுபடி செய்து வருகிறார் என்று குறிப்பிடப்பட்டு சான்றளிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9 சாகுபடி அடங்கல் கணக்கில் மாரிமுத்து மகன் ராஜேஷ் என்பவர் சாகுபடி செய்து வருகிறார் என்று குறிப்பிட்டு சான்றளிக்கப்பட்டுள்ளது.


PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:45:13 +0530

6.3) வா.சா.ஆ.5–ஐ பரிசீலிக்கும் போது வாதியின் தகப்பனார் மாரிமுத்து என்பவருக்கு 12.09.2013 நாளிட்டு கொடுக்கப்பட்ட கடிதம் ஜி.எஸ்.451/வக்பு/தஞ்சை/13–ல் "**ஹஜரத் ஹபீப்ஷா காவிரி தர்கா வக்பு தமிழ்நாடு வக்பு வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வக்பாகும். அதன் அரசிதழ் (கெஜட்) பதிவு எண்.451/தஞ்சாவூர் ஆகும். மேற்படி வக்புக்கு சொந்தமான நஞ்சை/புஞ்சை பூமியில் பட்டா எண்.102 சர்வே எண்.266/1, 3, 4A விஸ்தீரணம் 0.11.5, 0.21.5, 0.35.0–ல் எவ்வித வாடகையோ அல்லது நிலக்குத்தகையோ வக்புக்கு செலுத்தாமல், இருந்து வருவது வக்பு சட்டத்திற்கு எதிரானதாகும். ஆகவே இக்கடிதம் கிடைத்த உடன் மேற்படி இடத்திற்கு குத்தகை செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளும்படி தெரிவிக்கப்படுகிறது**" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6.4) 13.09.2013 அன்று அனுப்பப்பட்ட வா.சா.ஆ.5–ஐ பெற்றுக்கொண்ட மாரிமுத்து மகன் ராஜேஷ் (வாதி) மறு வருடம் (12.08.2014) பிரதிவாதி நிர்வாகத்திற்கு அனுப்பிய கடிதத்தில் 3 ஆண்டுகள் குத்தகையாக ரூ.12,000/–ஐ அனுப்பி உள்ளதாகவும் அதைப்பெற்றுக் கொண்டு ரசீது வழங்குபடியும் கேட்டுக் கொண்டுள்ளதை வா.சா.ஆ.6 மூலம் அறிய முடிகிறது.

6.5) வா.சா.ஆ.8–ஐ பரிசீலிக்கும் போது கடந்த 18.08.2014 அன்று வாதிக்கு பிரதிவாதி தரப்பில் கொடுக்கப்பட்ட பதில் கடிதத்தில் "**தாங்கள் கடந்த 01.07.2014 அன்று தேதியிட்ட பதிவு தபால் மூலமாக ரூபாய் 12,000 குத்தகைத் தொகை மூன்று வருட காலத்திற்கு என குறிப்பிட்டு அனுப்பி உள்ளீர்கள். நான் தாங்களுக்கு எப்பொழுது குத்தகைக்கு நிலம் வழங்கினேன். எனது அனுமதியோ வாரிய அனுமதி இல்லாமல் தரிசாக கிடந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து கொண்டு**



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:45:20 +0530

**தாங்களாகவே ஒரு தொகையை நிர்ணயம் செய்து அனுப்பி உள்ள காரணத்தால் இந்த டிராப்ட்டை ஏற்றுக்கொள்ள இயலாது.**" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6.6) மேற்கண்ட சூழலில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6, வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆகியவற்றை பரிசீலித்த வகையில் வாதி அவரது தகப்பனார் காலம் முதல் தாவா சொத்துக்களை அனுபோகம் செய்து வருகிறார் என்பதை அறிய முடிகிறது. அதேபோல் வா.சா.1 குறுக்கு விசாரணையில் "**எனக்கும் வப்போர்டுக்கும் நேரடி தொடர்பு இல்லை என்றால் சரிதான். என் தந்தை பார்வதியிடமிருந்து வழக்கிட சொத்தை 1993 ல் பெற்றார். வழக்கிடை சொத்தை பொருத்து பார்வதி அம்மாளுக்கும், வப்போர்டுக்கும் தொடர்பு என்றால் சரிதான்**" என்று சாட்சியளித்துள்ளார்.

6.7) மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணையில் "**பார்வதி அம்மாளிடமிருந்து குத்தகை பெறும்போது வழக்கிடை சொத்தானது வப்போர்டுக்கு சொந்தமானது என்று தெரிந்து தான் நாங்கள் குத்தகை அனுபவம் பெற்றோமா என்றால் என் தந்தைக்கு படிப்பறிவு அதிகம் இல்லாததால் சொத்தை பற்றி தெரிந்து கொள்ளாமல் சொத்தின் அனுபவத்தை பெற்றுக் கொண்டார். வழக்கடை சொத்தானது வப்போர்டுக்கு சொந்தமானது என்று 2013 ல்தான் என் தந்தை தெரிந்து கொண்டார். வழக்கிடை சொத்திற்கான நிலவரி & தீர்வையை என் தந்தைதான் செலுத்தி வந்தார். சொத்து வரி செலுத்தும் போது சொத்தின் உரிமையாளர் வப்போர்டு என தெரிந்து என் தந்தை வரி கட்டினாரா? அல்லது உரிமையாளர் யார் என்று தெரியாமல் வரி கட்டினாரா என்றால் தாவா சொத்தின் உரிமையாளர் வப்போர்டு என்று தெரிந்துதான் என் தந்தை வரி கட்டினார்.**" என்று சாட்சியளித்துள்ளார்.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:45:27 +0530

6.8) வாதி தரப்பு சாட்சியங்களை பரிசீலனை செய்த வகையில் வாதி தாவா சொத்தினை அனுபோகம் செய்து வருகிறார் என்று புலப்படுகிறது. அதே வேளையில் பிரதிவாதியின் குத்தகைதாரர் வாதி அல்ல. பிரதிவாதி நிர்வாகத்திற்கு தெரியாமலேயே வாதி தாவா சொத்துக்களை அவரது தகப்பனார் காலம் முதல் அனுபோகம் செய்து வருகிறார் என்பதையும் அறிய முடிகிறது. தாவா சொத்துக்களை பிரதிவாதி சட்டவிரோதமாக அனுபோகம் செய்து வருகிறார். எனினும் சட்டத்திற்கு புறம்பான வழிகளை பின்பற்றி வாதியை தாவா சொத்துக்களில் இருந்து வெளியேற்ற முடியாது. அதேபோல் உண்மையான உரிமையாளருக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க முடியாது.

6.9) ஒரு நபர் சட்ட விரோத ஆக்கிரமிப்பாளராக இருந்தாலும் அவரை சட்டத்திற்குட்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி தான் சொத்தில் இருந்து வெளியேற்ற முடியுமே தவிர சட்டத்திற்கு புறம்பான வழிகளை பின்பற்றி வெளியேற்ற அனுமதிக்க முடியாது. அந்த வகையில்தான் வாதி தன்னை சட்டப்பூர்வ வழிமுறைகளன்றி வேறு வகையில் பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். **சட்டப்பூர்வ வழிமுறைகளை பின்பற்றி தாவா சொத்துக்களில் இருந்து வாதியை வெளியேற்றுவதில் பிரதிவாதி நிர்வாகத்திற்கு எந்த தடையும் இல்லை.**

7) **இறுதியாக தாவா சொத்துக்களில் வாதியின் அனுபோகத்திற்கு சட்டத்திற்கு புறம்பான வழியில் பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி செலவுத்தொகையின்றி வாதியின் வழக்கு அனுமதிக்கப்படுகிறது.**



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:45:33 +0530

**சட்டப்பூர்வ வழிமுறைகளை பின்பற்றி தாவா சொத்துக்களில் இருந்து வாதியை வெளியேற்றுவதற்கு பிரதிவாதி நிர்வாகம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இந்தத் தீர்ப்பு தடையாக இருக்காது.**

இத்தீர்ப்புரை என்னால் *Google docs* உதவியுடன் வரிவடிவம் கொடுக்கப்பட்டு, பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (15.04.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:45:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு

1). <u>வாதி தரப்பு சாட்சிகள்:</u>

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.1 | திரு. ராஜேஷ் |
| 2 | வா.சா.2 | திருமதி. மாலா |
| 3 | வா.சா.3 | திரு. சிவக்குமார் |
| 4 | வா.சா.4 | திரு. பாலமுருகன் |
| 5 | வா.சா.5 | திரு. நடராஜன் |

2). <u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 09.03.1994 அன்று மாரிமுத்து செலுத்திய கிஸ்து ரசீது அசல். |
| 2 | வா.சா.ஆ.2 | 04.04.1998 அன்று மாரிமுத்து செலுத்திய கிஸ்து ரசீது அசல். |
| 3 | வா.சா.ஆ.3 | 13.02.2007 அன்று மாரிமுத்து செலுத்திய கிஸ்து ரசீது அசல். |
| 4 | வா.சா.ஆ.4 | 12.02.2007 நாளிட்ட சிட்டா. |

| | | |
|---|---|---|
| 5 | வா.சா.ஆ.5 | 13.09.2013 நாளிட்டு பிரதிவாதி அனுப்பிய கடிதம். |
| 6 | வா.சா.ஆ.6 | 01.08.2014 தேதியிட்டு 12.08.2014 அன்று பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய கடிதம் கையிருப்பு நகல். |
| 7 | வா.சா.ஆ.7 | 01.08.2014 நாளிட்ட வங்கி வரைவோலை நகல். |
| 8 | வா.சா.ஆ.8 | 18.08.2014 நாளிட்டு பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய கடிதம். |
| 9 | வா.சா.ஆ.9 | 28.07.2014 நாளிட்ட சாகுபடி அடங்கல் கணக்கு உண்மை நகல். |

3). பிரதிவாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

4). சாட்சி சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | சா.சா.ஆ.1 | 13.02.2002 நாளிட்ட கிரைய ஆவணம் நகல். |

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.15 11:45:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு.